அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் V.] **DECEMBER**, 1905-௵ டிசெம்பர். [இலக்கம் 4.

ஜீவகாருணியத்தைப்பற்றிய கடிதங்களும் கதைகளும்.

ஆடு மாடு குதிரை கழுதை நாய் பூனை முதலாக வாயில்லா ஜந்துக்கள் அநேகம் இருக்கின்றன. அப்படிப்பட்ட எளிய ஜந்துக்களிடத்தில் நமக்கு ஐயோ பாவமென்று இரக்கமுண்டாயிருந்தால், காலையிலும் பகலிலும் இரவிலும் அவைகளுக்கு நாம் இரைகொடுத்துக் காப்பாற்றிவரவேண்டும்.

வாயில்லா ஜந்துக்களை எவனாவது ஒருவன் துன்பப்படுத்த நாம் பார்ப்போமானால், அப்படி அடித்து வருத்துகிறவனைக் கண்டு பேசி நாம் அந்த இம்சையை விலக்கவேண்டும். தங்கத் தாவில்லாமல் ஏதாவது ஒரு பிராணி தவித்தால், நாம் அதை நமது வீட்டிற்குக் கொண்டுவந்து தீனிபோட்டுக் காப்பாற்றவேண்டும்; அல்லது அதைக் காப்பாற்றுகிறவனிடமாவது ஓட்டிக் கொண்டுவந்து விடவேண்டும் என்று ஒரு சிறு மாணாக்கன் எழுதினான்.

பக்ஷிகளின்மேலாவது வேறு பிராணிகளின் மேலாவது யாராயினும் கல்லை யெடுத்துப்போட்டுத் தொந்தரவு பண்ணினால், நாம் உடனே அவனோடு பேசி அந்தக் கொடிய செய்கையை விலக்கவேண்டும்.

வண்டிக்காரன் குதிரைகளையும் மாடுகளையும் வருத்தப்படுத்துவதை நாம் பார்ப்போமானால், உடனே நாம் அந்த வண்டிக்காரனுக்கு நல்ல புத்தி சொல்லி அவனுக்கு இரக்கமுண்டாகப் பண்ணவேண்டும் என்பது ஒரு மாணாக்கன் எழுதின கடிதம்.

வாயில்லா ஜந்துக்களால் மனிதருக்கு உண்டாகும் நன்மை.

ஒவ்வொருவரும் வாயில்லாத ஜந்துக்களிடத்தில் அன்புள்ளவரா யிருக்கவேண்டும். வாயில்லா ஜந்துக்களெல்லாம் மனிதர்களுக்கு உண்மையான நேசர்களா யிருக்கின்றன. பசுமாடுகளில்லாவிட்டால் நமக்குப் பாலேது, மோர் ஏது? ஏர் உழ எருதுகளும் வண்டியிழுக்கக் குதிரைகளும் இல்லாவிட்டால், நமக்கு உணவு ஏது, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நாம் பிரயாணம் செய்வதுதான் ஏது? நாய்கள் இல்லாவிட்டால், குளிர் மிகுந்த வடநாட்டிலே எஸ்கிமோ என்னும் ஜாதியார் தங்கள் சாமான்களை ஓரிடத்திற்கு ஓரிடம் கொண்டுபோக வழியில்லாமல் தவிக்கவேண்டியதுதான். அங்கே நாய்களே அவர்களுடைய வண்டிகளை இழுத்துக்கொண்டு போகின்றன. பக்ஷிகளில்லாவிட்டால், எங்கும் பிணநாற்ற மெடுத்து யாவரும் உயிரிழக்க வேண்டியதாகி வருமல்லவா? அவைகளுக்கு வாயில்லாமல் இருப்பதனாலேயே நாம் அவைகளிடத்தில் அதிகமான இரக்கமுள்ளவர்களா யிருக்கவேண்டும். அவைகளுக்குப் பசி எடுத்தால் தீனி வேண்டுமென்று கேட்க வாயில்லை யென்பதை நாம் முக்கியமாய் ஞாபகத்தில் வைக்கவேண்டும். நமக்குப் பசி எடுத்தால் தக்ஷணமே போய் நாம் போஜனம் கேட்டுச் சாப்பிடுகிறோமே. அவை அப்படியில்லையே. ஐயோ பாவமென்று இரங்கி நாம் உணவு அளித்தால்தானே உண்டு; இல்லாவிட்டால் அவை பட்டினி

கிடந்து இறக்கவேண்டியதுதானே நாம் அப்ப டிப் பட்டினிகிடந்தால் நமக்கு எப்படியிருக்குமோ அதை நினைத்து நம்மைப்போலவே எளிய ஜந்துக் களை நாம் ஆதரிக்கவேண்டும் என்று ஒரு சிறுவன் எழுதினான்.

தன் யஜமானனுயிரைக் காப்பாற்றிய நல்ல நாய்.

ஒருநாள் வடநாட்டிலே ஒரு சிறுவன் தன் நாயோடுகூட வெளியே உலாவிவரப் போனான். வழியிலே சிறிய ஆறு ஒன்று இருந்தது. அவன் அதைத் தாண்டி அக்கரைக்குப் போகவேண்டும். அப்பொழுது அந்த ஆற்றில் பாலம் உடைந்து போய்ப் புதிய பாலம் கட்டிக்கொண்டிருந்தார்கள். ஜனங்கள் ஆற்றைக் கடந்துபோகக் குறுக்கே சிறிய பலகை ஒன்று போடப்பட்டிருந்தது. நமது சிறு வன் அதைப்பார்த்து அந்தப் பலகையின்மேல் மெல்ல ஏறி நடந்துபோனான். பாதிவழி போகை யில் பலகை தவறி அவன் தண்ணீரில் விழுந்து விட்டான். இனி அவன் செய்யவேண்டியது என்ன? அவனுக்கோ ஆற்றில் நீந்தத் தெரியாது. தன் யஜமானன் தண்ணீரில் விழுந்தது கண்டு தக்ஷணமே அவனுயிரைக் காப்பாற்ற அவனுடைய நாய் தண்ணீரில் குதித்து அவனண்டை சென் றது. நாய் தன்னிடம் வருவது கண்டு சிறுவன் நாயின் கழுத்துப் பட்டையைக் கையால் பிடித்துக் கொண்டு கொஞ்சம் நிலைப்படுத்திக்கொண்டான். அப்பொழுது, சிறிது தூரத்திலே பாலத்தண்டை வேலைசெய்துகொண்டிருந்த வேலைக்காரர்கள் பையன் தண்ணீரில் விழுந்துபோனதைப் பார்த்து தக்ஷணமே அவனைக் காப்பாற்ற விரைவாக ஓடிவந் தார்கள். ஆனால் அவர்கள் வருவதற்குள் அந்த நல்ல நாய் மெல்ல மெல்ல அச்சிறுமகனைக் கரை கொண்டு சேர்த்துவிட்டது. அதுமுதல் அந்த நாய் தன்யஜமானன் எப்பொழுது தண்ணீரண்டை போனாலும், அவன் ஒருவேளை தண்ணீரில் விழுந் துபோவானோவென்கிற பயத்தினால் அவனைப் பின் னால் இழுத்துப் பிடித்துக்கொண்டே போய் அவ னைக் காப்பாற்றிக்கொண்டிருந்தது என்று மற் றொரு பையன் எழுதி அனுப்பினான்.

ஒரு ஜீவனைப் பிடித்துத் தூக்குவது எப்படி?

நன்றாக வளர்ந்த பெரிய பூனைகளை அநேகர் அலக்ஷியமாகக் கழுத்துச் சதையைப் பிடித்துத் தூக்கிப் போடுகிறார்கள். அப்படித் தூக்குவது மிகவும் கொடுமையான காரியம். தாய்ப்பூனை தன் குட்டிகளைக் கழுத்துச் சதையை வாயினால் கவ்வித் தூக்கிக்கொண்டு போகிறது, மெய்தான். ஆனா லும், பூனைக்குட்டிக்கும் பெரிய பூனைக்கும் மிகுந்த வித்தியாசமுண்டல்லவா? பூனைக்குட்டியானாலுங் கூட அதற்கு வருத்தமில்லாமல் தூக்கவேண்டு மானால், கழுத்தைப் பிடித்துத் தூக்குவதே சௌக் கியமானது. பூனை பெரியதாக வளர்ந்துபோனால் அதன் உடம்பு அதிக கனமுள்ளதாகிவிடுகிறதல்ல வா? நாம் அதன் கழுத்தில் இரண்டு விரலால் பிடிக் கிற சொற்பச் சதை அவ்வளவு பாரத்தையும் தாங் கப் போதுமானதாகுமா? அப்படிப் பிடித்துத் தூக் கும்பொழுது பல பூனைகளுக்கு மிகுந்த வருத்த முண்டாகும். அதை நம்முடனே சொல்ல அதற்கு வாய் இல்லையே; திமிறிக்கொண்டு ஓடிப்போகவும் அதற்குச் சக்தியில்லை. நாமே தயவுபண்ணிவிட் டால் தானே உண்டு. ஆகையால் அப்படிப்பட்ட பெரிய பூனைகளை வயிற்றில் ஒரு கையைக் கொ டுத்துத் தாங்கிக்கொண்டு நாம் தூக்கவேண்டும்.

சிலர் நாய் எலி முதலான ஜந்துக்களைக் காதைப் பிடித்துத் தூக்குகிறார்கள்; அதுவும் இப்படிப் பட்ட உபத்திரவமான காரியந்தான். இப்படியே ஆடுமாடுகளையும் கன்றுக்குட்டிகளையும் காதைப் பிடித்து இழுப்பதும் வாலைப்பிடித்து இழுப்பதும் பொல்லாத பாதகமேயாம்.

கொடுங் குற்றம்.

நாய்களை வைத்து வளர்ப்பவர்களும் அதனிடத் தில் மிகுந்த அன்புள்ளவர்களும், குரைத்தல் முத லான பலவகைச் செய்கைகளால் நாய் நமக்குக் காட்டுகிற குறிப்புக்களை ஒருபொழுதும் அலக்ஷி யம் செய்யமாட்டார்கள். நமக்கு அடிமைப்பட்டு ஊழியம் செய்யும் பிராணிகளுடன் நாம் பொறு மையாகப் பழகி அவற்றின் செய்கைகளை உணர முயல்வோமானால், அந்தப் பிராணிகளுடைய பாஷைகளை யறிந்துகொள்வது நமக்கு மிகவும் எளி தாகிவிடும்.

மேனாட்டிலே ஒரு சிறு குடியானவன் தன் நாயுடனே வெளியே போய் மாலைப்பொழுதில் வீட்டிற்குத் திரும்பிவந்தான். வரும்பொழுது வழி யிலே ஒருவண்டி அடிபட்டு அவன் பாதையினின்று புரண்டு கீழே விழுந்துவிட்டான். தன் யஜமா னன் பிரஞ்ஞைதப்பிச் சோர்ந்து கிடப்பது கண்டு நாய் தக்ஷணமே வீட்டிற்கு ஓடி உரத்துக் குரைத்து வீட்டிலுள்ளவர்களை யெழுப்பிவிட்டது. அது கேட்டு வீட்டிலுள்ளவர் கதவைத் திறந்து நாயை உள்ளே அழைத்துக்கொண்டார்கள். அவ்வளவோடு அந்த நாய் சும்மா இராமல், பின்னும் அதிகமாகக் குரைக்க ஆரம்பித்தது. அதுகண்டு அவர்கள் கோ பங்கொண்டு நாயை வெளியே தள்ளிக் கதவை மூடிக்கொண்டார்கள். அப்புறமும் அந்த நாய் சிறிதுநேரம் வாயிலில் மன்றாடிப் பார்த்தது.

ஏனென்று கேட்பார் ஒருவருமில்லை. அதனால் அது மறுபடி திரும்பித் தன் யஜமானன் பக்கத்திலேபோய்ச் சேர்ந்துவிட்டது.

இது இப்படியிருக்க, பையனைக் காணமல் வீட்டுக்காரர் தேடத் தலைப்பட்டுக் கடைசியில் அவன் வண்டியடிபட்டு விழுந்த சங்கதி தெரிந்து அவ்விடத்திற்கு ஓடிப் பார்த்தார்கள். அவன் பக்கத்திலே அந்த நல்ல நாய் நின்று காத்துக்கொண்டிருந்தது. இவர்கள் போய்ப்பார்த்த சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தப் பையன் இறந்துபோனன்.

இந்தக் கதையிலே மிகுந்த துக்கத்தை உண்டாக்குவது என்னவென்றல், துர்மரணங்களை விசாரிக்கும் தலைவர் வந்து அந்தப் பையன் உடலைப் பரிசோதனை செய்தபோது அவர், 'நாய் செய்த எச்சரிக்கையைக் கவனித்து, உடனே தகுந்த வைத்தியம் செய்திருந்தால், இவனுக்கு இந்த மரணம் நேரிட்டிராது என்பது என் அபிப்பிராயம். ஐயோ! அநியாயமாய்ப் பிள்ளையைப் பறிகொடுத்து விட்டீர்களே' என்று மிகவும் பரிதாபப்பட்டுக் கண்ணும் கண்ணீருமாய்ச் சொன்னர். ஐயோ! அதைக் கேட்கும்போது பெற்றவர்களுக்கு எப்படியிருக்கும்! தங்களுடைய பேதமையைத் தாங்களே வெறுத்துக்கொண்டு புலம்பினர்கள்.

மாமிச போஜனத்தினலும் மரக்கறி போஜனத்தினலும் உண்டாகும் குணகுணம்.

மாமிச போஜனத்தினலும் மரக்கறி போஜனத்தினலும் உண்டாகும் குணகுணங்கள் இப்படிப்பட்டவை யென்று கண்டறியும் பொருட்டுப் புதார்த்த தத்துவசாஸ்திரி ஒருவர் பின்வருமாறு பரிசோதனை செய்து பார்த்தார். அதாவது, ஒரு புருவையும் ஒரு கழுகையும் வளர்க்க ஆரம்பித்து அவர், புருவுக்கு மாமிசத்தையே உணவாக ஊட்டிவந்தார்; கழுகுக்கோ, தானியங்களையே இரையாகக் கொடுத்துவந்தார். அப்படியேவளர்ந்து அவை பெரிய பக்ஷிகளானபோது அவைகளுடைய இயற்கையான குணம் முற்றும் மாறிப்போய்விட்டது. எலிகளையும் மற்றும் பல சிறிய ஜந்துக்களையும் தின்று வளர்ந்த புரு மிகவும் கொடிய ஜந்துவாகி விட்டது; தானியங்களைத் தின்று வளர்ந்த கழுகோ, தன் இனத்திற்கு இயற்கையான கொடுமைக் குறி சிறிதும் தன்னிடத்தில் இல்லாமல் சாதுவாய் அன்புள்ள நல்ல பிராணியாகிவிட்டது.

"படைகொண்டார் நெஞ்சம்போல் நன்னூக்கா தொன்றன்
உடல்சுவை யுண்டார் மனம்." (குறள்.)

இந்து தேசத்திலே நெடுநாளாக மரக்கறி பதார்த்தங்களையே போஜனமாகப் புசித்துவரும் பிராமணர், ஜைனர் முதலான ஜாதியார் இதுவனாயிலும் கொலைசெய்தாரென்கிற கதை எவரும் காதினுலும் கேட்டதே யில்லையன்றே? அந்தச் சாதிகளைச் சேர்ந்த அநந்தகோடி ஜனங்களில் இதுவனாயில் ஒருவனுவது ஆடுமாடு அடிக்கும் கசாப்புக்காரனுயிருந்தது உண்டா?

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை."

என்ற குறளின்படியே அவர்கள் நடந்துவருகிறர்களென்பதற்கு இதைவிட வேறு என்ன நல்ல திருஷ்டாந்தம் வேண்டும்? இக்காரணம்பற்றியே, ஆகாரத்திற்குத் தகுந்தபடி புத்தி மாறிப்போகுமென்றும், தானியபோஜனமானுலுங் கூட, நல்லவருடைய பதார்த்தமானல் நல்ல புத்தி யுண்டாகுமென்றும், தீயவருடைய பதார்த்தமானல் துர்ப்புத்தி யுண்டாகிவிடுமென்றும், இந்து தருமசாஸ்திரங்கள் முறையிடுகின்றன. அதனலேதான் இந்துக்களுக்குள் கண்டவிடத்திலும் புசிக்கக்கூடாதென்றும், கண்ட பதார்த்தங்களையும் தின்னக்கூடாதென்றும் ஆகாரநியமம் ஏற்பட்டிருக்கிறது. இந்த உண்மையைத் தெரிந்துகொள்ளாமல் இத்தேசத்தில் இக்காலத்தவர் பலர் தம்முன்னேர்களுக்கு ஒன்றும்தெரியாதென்று இகழ்ந்து தம்மனம்போனபடி நடக்கத் தலைப்பட்டு வீணய்க் கெட்டுப்போகிறர்கள். இப்பொழுது மேனட்டுத் தத்துவசாஸ்திரிகள் நன்றய்ப் பரிசோதனைசெய்து நமது நீதிநூல்களிலுள்ளவையெல்லாம் அருமையான விஷயங்களென்று தெரிந்து போதிக்கத் தலைப்பட்ட பிறகுதான், சிலர் நம் பழைய வழியைக் கைப்பற்றத் தலைப்பட்டிருக்கிறர்கள். இவ்விதமாகவாவது இனி நமது தேசத்தார் சீர்ப்படுவார்களானல், அதுவே இத்தேசத்துக்குப் பெரிய பாக்கியமாகும்.

"நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழு நெறி."

குதிரைச் சுவர்க்கமாகிய புல்நிலம்.

அமெரிக்காவிலே வெர்மெண்டு என்னும் தேசத்தில் அபெல் ஸ்லேட்டன் என்னும் துரை ஜீவகாருண்ணியம் அதிகரித்தவராய்த் தாமே சொந்தமாகப் பெரிய மைதானமொன்று வாங்கி, அதில் விசேஷமாகப் புல் பயிரிட்டு, அந்தப் புலத்திற்குக் 'குதிரைச் சுவர்க்கம்' என்று பெயர் வைத்தார். அந்தப் பெயர் அதற்குத் தகுந்ததேயாம். அதில் அவர் செய்த காரியம் என்னவென்றல், வேண்டிய காலம் உழைத்து உபயோகமற்றுப்போன தள்ளாத குதிரைகளை அநியாயமாய் அல்லாடி வருந்தவிடாமல் அவைகளைத் தாம் வாங்கிக்கொண்டு தம்முடைய விசாலமான புல் தோட்டத்தில் விட்டுவிடுவார். குதிரையின் சொந்தக்காரரிடம் அவர் அதற்காக ஒரு காசுகூட அபேக்ஷிப்பதில்லை. அந்

த் தோட்டத்தைக் கண்டால் தள்ளாத குதிரைக ளுக்கு எப்படியிருக்கும் யோசித்துப் பாருங்கள். அதைவிடச் சுவர்க்கலோகம் அவைகளுக்கு வேறே வேண்டுமோ? அவ்விடத்தில் அவைகளை அதட்டு வாருமில்லை, அடிப்பாருமில்லை, பிடித்துக் கட்டு வாருமில்லை. வாழ்நாளெல்லாம் உழைத்து மெலிந்து போன குதிரைகள் அந்தப் பெரிய மைதானத்தில் யதேச்சையாகத் திரிந்து வேண்டியவளவு புல் மேய்ந்து, அதற்கு அருகே பெருகியோடும் ஓடை யிலே தண்ணீர் குடித்து, இஷ்டமானபோது மெத்தைபோல மெதுவான பசும்புல் தரையிலே படுத்துத் தங்கள் மற்ற வாழ்நாளை வெகு சவுக்கிய மாய்க் கழிக்கலாயின. இவருடைய நல்ல முயற்சி யைக் கண்டு அந்நாட்டிலுள்ள நெஞ்சுருக்கமுள்ள வர்களான ஜனங்கள் வெகுகாலம் தங்களுக்கு உழைத்துக் கிழமாய்ப்போன தங்கள் அருமைக் குதிரைகளை அயலாருக்கு விற்கவும் வேறுவிதமாகத் துன்பப்படுத்தவும் மனம்வாராமல் இந்த ஸ்லேட் டன் துரையினிடம் கொண்டுவந்து அவைகளை வைத்துக்கொள்ளும்படி வேண்டுகிறார்கள். அவர் அவைகளை வெகு சந்தோஷமாக வாங்கித் தமது புல் தோட்டத்தில் விட்டு விசேஷமாக ஆதரித்துவரு கிறார். அவருடைய நன்முயற்சியில் அவருடைய அருமை மனையாட்டியும் கூடி விசேஷமாகப் பாடு பட்டுவருகிறாள். கடவுளுடைய கைவேலையான வாயில்லா ஜந்துக்களிடத்தில் அன்பாயிருப்பதைப் பார்க்கிலும் பேராநந்தம் வேறு உண்டோ? இந்தக் குதிரைகள் ஸ்லேட்டன் துரையினுடைய புல் தோட்டத்தில் தேவபோகத்தை அனுபவித்துக் கடைசியில் அவருடைய கையினாலே அடக்கம் செய்யப்படுகின்றனவாம். அவர்களிருவரும் சகல பாக்கியமும் பெற்று ஒரு குறையுமில்லாமல் வெகு காலம் சுகமாக வாழ்ந்திருப்பார்களாகவென்று அந் தத் தேசத்திலுள்ள சகல ஜனங்களும் எப்பொழு தும் அவர்களை வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். இதையே மேல்வரிச் சட்டமாகக்கொண்டு அங் கங்கே பிரபுக்கள் பலர் இப்படிப்பட்ட நற்காரியங் கள் செய்யத் தலைப்பட்டால், ஜீவஹிம்ஸையென் பது சீக்கிரத்தில் இவ்வுலகத்தைவிட்டு ஒழிந்து போகுமல்லவா?

அபாயத்தினின்று ஒரு நாயைக் காப்பாற்றின நல்ல நாய்.

பனி மிகுந்த வடநாட்டிலே சிறிய நாய் ஒன்று ஒரு ஏரியில் உறைந்துபோன பனிப்பாறையின் மீது ஓடி உலாவிக்கொண்டிருந்தது. அப்பொ ழுது அது அங்கே தண்ணீர் உருகிப்போன ஒரு சிறிய பள்ளத்திலே விழுந்துவிட்டது. பிறகு அது எவ்வளவு பாடுபட்டும் அதினின்றும் கரையேறி வர முடியாமல் தவித்துக்கொண்டிருந்தது. அதற் குச் சமீபத்திலிருந்த பெரிய நியூபௌண்டுலாந்து நாய் ஒன்று இந்தச் சிறிய நாய் இப்படி தத்தளிப் பதைப் பார்த்து உடனே அந்த இடத்திற்கு ஓடி, ஒரு காலால் இடிந்துபோன பனிப்பாறையின் ஓரத்தை உறுதியாகப் பிடித்துக்கொண்டு தண்ணீரி லிறங்கி அந்த நாயைப் பிடித்திழுக்கப் பிரயத் தனப்பட்டது. எவ்வளவு பிரயத்தனப்பட்டும் இதன் வாய்க்கு அந்த நாய் அகப்படவில்லை. சிறிய நாயோ, தண்ணீரில் நிலைகொள்ளாமல் தவித்துத் தப்பித்துக்கொள்ளப் பலவிதமாகப் பிர யத்தனப்பட்டும் முடியாமல் மிகவும் சோர்ந்து போய்விட்டது. கடைசியில் நியூபௌண்டுலாந்து நாய் விடாமுயற்சியாய் வெகு பிரயாசப்பட்டுச் சிறிய நாயை எட்டி அதன் கழுத்தைத் தன் வா யால் கவ்விப் பிடித்திழுத்துப் பத்திரமாகக் கரை மேலே போட்டது. உடம்பு சற்றே சுகப்பட்ட பிறகு சிறிய நாய் எழுந்து தன் வாலையாட்டி மிகுந்த நன்றியுடனே நியூபௌண்டுலாந்து நாயின் உடம்போடு தன் உடம்பைத் தேய்த்துக்கொண் டது. பின்பு இரண்டு நாயும் ஒன்றாய்க் கூடி ஓடிப்போய்விட்டன.

எலியைத் தாய்போல் வளர்த்த பூனை.

அமெரிக்காவில் ஒரு பண்டசாலையிலே எலி களைப் பிடிப்பதற்காகப் பூனையொன்று வளர்க்கப் பட்டுவந்தது. ஒரு சமயத்தில் ஒரு எலிக்குஞ் சைப் பிடித்து அந்தப் பூனை எதிரில் எறிந்தார் கள். பூனை அதை என்னசெய்யவேண்டும்? உட னே கொன்று தின்றுவிட வேண்டுமல்லவா? அப் படிக் கொல்லவில்லை; தன் குஞ்சாக அதை அபிமானித்துத் தன் குட்டிபோலவே அதையும் வளர்த்துவரத் தொடங்கியது. அந்த எலிக்குஞ்சு அந்தப் பூனையினுடைய மற்ற ஐந்துகுட்டிகளோடு கூடி அதன் பாலை ஊட்டிஜீவித்து வருகிறதென் றால், இதைவிட ஆச்சரியம் வேறென்னவேண்டும். அந்தப் பூனையினிடத்தில் எலிக்குட்டி அதிக திருப்தியாக வாழ்ந்துகொண்டிருக்கிறது. மற்ற எலிகளைப்போலவே புஷ்டியாக வளர்ந்து கொ ழுத்திருக்கிறது.

அந்தப் பூனை குடியிருக்குமிடம் அங்கே ஒரு பீப் பாய். ஒரு தருணத்தில் அந்த எலிக்குட்டி அந்தப் பீப்பாயிலிருந்து குதித்து வெளியே போயிற்று. தாய்ப் பூனை அதைப் பார்த்து உடனே தான் குதித்து ஓடிப்போன எலிக்குஞ்சை மெதுவாயும் உறுதியாயும் வாயில் கவ்விக்கொண்டு வந்து தன் இருப்பிடத்தில் சேர்த்துவிட்டது. அதுமுதல் அவையெல்லாம் அவ்விடத்திலே ஒன்றுகூடி

ஜீவித்துக்கொண்டிருக்கின்றன. அந்தப் பெரிய பூனைக்கு எலியைப் பிடித்துத் தின்னத் தெரியா தென்பீர்களோ? இல்லை; எலி பிடிப்பதில் அது சிறந்த சாமர்த்தியமுள்ளது. இந்த எலிக்குஞ்சை வளர்த்துக்கொண்டபிறகுகூட, அது பல பெரிய எலிகளைப் பிடித்துத் தின்றிருக்கிறது. அப்படி யிருக்க, தன் இரையான எளிய ஜீவனிடத்தில் இந்தப் பூனைக்கு இப்படிப்பட்ட பிரீதி உண்டா னதற்கு என்ன காரணம்? யோசித்துச் சொல் லுங்கள்.

மாமிச பரிசோதனை.

அமெரிக்காவிலே நியூயார்க்கு தேசத்தில் ஏற் பட்டிருக்கும் நகரவிசாரணைச்சங்கத்தின் அக்கிராச னுதிபதி யொருவர் கடையிலே விற்பனைசெய்யும் மாமிசத்தைச் சில மாதங்களுக்கு முன்னே பரிசோ தனைசெய்து பார்த்தார். அதனால் நமக்கு மிகுந்த நன்மை விளைந்திருக்கிறது. அதாவது, வருத்தப்பட் டுப் புண்பட்ட பிராணிகளின் மாமிசம் மிகவும் அசௌக்கியத்திற்கு இடமாய்க் கேடுகெட்டுப்போ யிருக்கிறதென்று அவர் கண்டறிந்தார். எளிய ஜீவன்களை வதைத்துத் தின்பது கொடுமையல்ல வென்று சொல்லுகிறவர்கள்கூட அநேகர், அநாதர வினால் உபத்திரவப்பட்ட பிராணிகளின் மாமிசம் ஒருபோதும் நல்லுணவாகாதென்பதை நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனாலும், சாதா ரணமாய் இதை எல்லா ஜனங்களும் தெரிந்துகொள் வதில்லை; நாம் சொன்னாலும் நம்புவதில்லை. பிராணிகள் படும் வருத்தம் இப்படிப்பட்டதென்ப தையும் கவனிப்பதில்லை; மாமிச போஜனத்தினால் தங்களுக்கு ஏதாவது அசௌக்கியம் உண்டானா லும், அதையும் ஊன்றிப்பாராமல் உபேக்ஷையா யிருந்துவிடுகிறார்கள்.

இந்த அக்கிராசனாதிபதி மாமிச பரிசோதனை விஷயத்தில் இவ்வளவு உக்கிரமாக ஊக்கம் கொண் டதற்குக் காரணம் என்னவென்றால், அவர் படித்த ஒரு புதுமையான கதையும், மற்றும் பல சஞ்சிகை களுமேயாம். அந்தப் புத்தகங்களில், ஆடுமாடுகளை அடிக்கும் இடங்களிலுள்ள பரிதாபங்களும், மாமி சங்களை ஏற்றி வெளிக்கு அனுப்பும் அக்கிரமங்க ளும் கூறப்பட்டிருந்தன. இராஜாங்கத்தார் இவ்வி ஷயத்தைக் கவனியாமல் உபேக்ஷையாயிருப்பது உசிதமல்ல என்றும் பல பத்திரிகைகளில் பிரசுரம் செய்யப்பட்டிருந்தது.

அதைக் கண்டவுடனே அந்த அக்கிராசனாதிபதி மாமிசங்களை முற்றும் பூராயமாய்ப் பரிசோதிக்க வேண்டுமென்று உத்தரவுபண்ணினர். அப்படிப் பரிசோதிக்கப் புகுந்ததில், புதிது புதிதாகப் பின் னும் பல கேடுகெட்ட அக்கிரமங்களும் அநியாயங் களும் வெளிக்கு வந்தன. அதுகண்டு மாமிச வியா பாரத்திலே திரவியவிஷயத்தில் சம்பந்தப்பட்டவர் கள் பலர் அந்த அக்கிரமங்களைப் பகிரங்கப்படுத் தச் சிறிதும் பிரியப்படாமல் தடுக்க முயன்றார்கள். கடைசியில் அவர் பிடித்த காரியத்தைச் செய்து முடித்தார். உயிரோடிருக்கையில் ஆடு மாடு பன்றி முதலான பல ஜந்துக்களை நன்றாகப் பரிசோ தனை செய்யவும், அவைகளை அடித்தபிறகு அவற் றின் மாமிசத்தை நன்றாகப் பரீக்ஷிக்கவும் பிறகு பலர் ஏற்படுத்தப்பட்டார். இப்படியே மற்ற நாடுகளி லும் நடத்தினால், எவ்வளவு நன்மை உண்டாகு மோ, யோசித்துப் பாருங்கள்.

மாமிச பரிசோதனையினால் உண்டான நன்மை.

இந்தப் பரிசோதனை ஜீவஜந்துக்களுடைய வருத்தத்தைத் தணிக்க எவ்வளவு உதவியாகுமென்று பார்ப்போம். ஒரு பட்டணத்திலிருந்து மற்றொரு பட்டணத்திற்கு அடிப்பதற்காகக் கொண்டுபோ கப்பட்டு அங்கே இறங்கின ஆடு மாடுகளின் பரி தாபமான நிலையைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு வன் சொல்லியதைக் கேளுங்கள். அவன் சொன் னதாவது,—"வண்டியில் வரும்போது பெரிய பிராணிகளின் காலின்கீழ் மிதிபட்டு அநேகம் கன் றுக்குட்டிகள் செத்துப் பிணமாக வந்து இறங்கின; சில கால் ஒடிந்து நிற்கமாட்டாமல் தவித்தன; சில குற்றுயிராய்க் கிடந்தன. சில இளங்கன்றுகள், இருப்புப்பாதைப் பிரயாணத்தின் வருத்தத்தையும் தாங்கமாட்டாத அன்று ஈன்ற கன்றுகளும் சில இருந்தன. பசுமாடுகளெல்லாம் மிகவும் களைத் துச் சோர்ந்துபோய்த் தள்ளாடிக்கொண்டிருந்தன. ஐயோ! பச்சைப் பாலகனான கன்றுகளையும் மாமி சத்திற்காக விற்றுப்போட்டார்களே!" என்று அந்த மனிதன் தன் கண்ணால்கண்ட கோரணியைப் பரி தாபமாகச் சொல்லியிருக்கிறான்.

இப்படிப்பட்ட அக்கிரமங்களெல்லாம் இவர் செய்த ஏற்பாட்டினால் அநேகமாய் அடங்கிப்போகு மல்லவா? இப்படியே மற்ற நாடுகளிலும் நடத்தச் சட்டதிட்டங்கள் ஏற்பட்டால், நமக்குப் பேருதவி யாயிருக்கும். வாயில்லா ஜீவன்களுடைய வருத்தம் அநேகமாய் ஒழிந்துபோய் விடுமென்பது நிச்சயம்.

வாயில்லா ஜந்துக்களைக் கப்பலேற்றி ஹிம்ஸிப்பது.

ஆடு மாடுகள்.

கடல்மார்க்கமாய் ஆடு மாடுகளைக் கப்பலேற்றி அனுப்புவதிலும் உபத்திரவங்கள் அநேகம் உண்டு. 'கப்பலில்போகும்பொழுது ஆடு மாடுகளுக்கு உபத் திரவம் அதிகமில்லை; அவை சுகமாகவே போய்ச் சேரும்' என்று அநேகர் நினைக்கக்கூடும். ஒருதட வை மாரிகாலத்தில் நடந்த கப்பல் யாத்திரையின்

கொடுமையைக் கேட்டால் அதன் உண்மை வெளிப்படும். அந்தக் கொட்டுகிற கொடிய காற்று மழையில் 700 ஆடுகள் கப்பலின் மேல்தளத்தில் நனைந்துகொண்டே நின்றன. 75 காளை மாடுகள் கப்பலிலே விழுந்து காலொடிந்து, உயிரோடே கடலில் தள்ளப்பட்டன. மூன்றுநாள் அந்தக் கொடிய காற்றுமழை அதியுக்கிரமாயிருக்கவே கப்பலிலுள்ள ஆடு மாடுகளுக்குத் தீனியாயினும் தண்ணீராயினும் சிறிது கொடுக்கக்கூடச் சாத்தியப்படாமல் போய்விட்டது. அவை கப்பலைவிட்டுக் கீழே இறங்கின போது, சில ஜீவன் நடக்கவும் சக்தியில்லாமல் பலவீனமாயிருந்தன; சில காலொடிந்து கிடந்தன. பத்துப் பன்னிரண்டுநாள் ஒரேமூச்சாய் விடாமல் மழை பொழியவே, அந்தக் கால்நடைகளெல்லாம் உடம்பு விறைத்து வலிகொண்டு வாயினால் சொல்ல முடியாத வருத்தத்தை அனுபவித்தன. கப்பலிலிருந்து வெளியே கொண்டுவந்தபோது ஒரு ஆடு செத்துப் பிணமாய்க்கிடந்தது. வாயினால் சொல்ல முடியாத இன்னும் பொல்லாத கொடுமைகள் நடந்ததாக அத்தருணம் அங்கிருந்து பார்த்த ஒரு சிறுவன் மிகுந்த விசனத்துடனே தெரிவித்திருக்கிறான்; அந்தத் துக்கக்காட்சி ஒருநாளும் தன் மனத்தைவிட்டு மறக்காதென்றும், அதைத் தடுக்கத் திறமை தனக்கு இல்லாமல்போனது தன் துர்ப்பாக்கிய மென்றும் சொல்லி அவன் சங்கடப்பட்டான்.

பன்றிகள் பட்டபாடு.

நியூயார்க் நகரத்திலே ஜீவ ஹிம்ஸை செய்யுமிடத்திற்குக் கொண்டுவரப்பட்ட பல பிராணிகளில், இரண்டு பன்றிகள் ஒன்றோடொன்று வாயைச் சேர்த்துக் கட்டப்பட்டபடியே கிடந்தனவென்று ஒரு பத்திரிகை சொல்லிப் புலம்புகிறது. அவை ஒன்றும் தின்னக்கூடாதென்று அவற்றை விற்பனைக்குக் கொண்டுவந்தவன் அப்படிக் கட்டிவிட்டான்போலும். அவை, வெகு தூரதேசத்திலிருந்து கப்பலில் வந்தவை யென்றால், வழியில் அவை எப்பாடு பட்டிருக்குமோ, நீங்களே யோசித்துப்பாருங்கள்.

ஆமைகள் பட்டபாடு.

நியூயார்க் நகரத்திலே ஜீவஹிம்ஸை நிவாரண சங்கத்தார், உணவுக்காக ஜீவவதை செய்யுமிடத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஆமைகளைப் பரிதாபத்தோடு போய்ப் பார்த்தார்கள். மேலிந்தியா தீவிலிருந்து ஒரு புகைக்கப்பலில் 60 பெரிய ஆமைகள் கொண்டுவரப்பட்டிருந்தன. அவற்றின் வாய் மிகக் கொடுமையானவிதமாகக் கயிறுகளால் அழுத்திக் கட்டப்பட்டிருந்தன. அவற்றில் அனேகம் வழியிலேயே இறந்துபோயின. கப்பலிலிருந்து கடைக்குக் கொண்டுபோகிற வண்டியில் தூக்கிப் போடும்போது அனேகம் குற்றுயிராய்த் துடித்தன. பெரிய ஆமையொன்று தன்னுடைய துன்பம் பொறுக்க முடியாமல் தற்கொலை செய்துகொண்டு தன் சங்கடத்தை யொழிக்கத் துணிந்ததுபோலக் கப்பல் பலகையில் தன் தலையை இடித்துக்கொண்டிருந்ததைப் பார்க்க மிகப் பரிதாபமாயிருந்தது.

வருத்தமும் நோயும் மனிதருக்கு மாத்திரமே யுண்டு, வாயில்லா ஜந்துக்களுக்கு உண்டாவதில்லை யென்று வீண்வாதம் செய்து, ஸ்திரீகளும், புருஷர்களும் பலர் இதைப்பற்றிக் கவனியாமலே உபேக்ஷையா யிருந்துவிடுகிறார்கள். இந்த உபேக்ஷை அவர்களுக்கு ஒருவிதமான மனமகிழ்ச்சி உண்டாகக் காரணமாயிருந்தாலும் உலகத்தில் எண்ணிறந்த ஜீவராசிகளுக்கு அநியாயமும் அக்கிரமமுமான கொடிய துன்பமுண்டாவதற்கு முக்கியமான காரணமாயிருக்கின்றதே!

ஐயோ! நம்மோடு கூடிவாழும் உபகாரப் பிராணிகளாகிய எளிய வாயில்லா ஜந்துக்களுக்கு இப்படிப்பட்ட கொடிய செய்கைகள் நடக்கும்படி பார்த்துக்கொண்டிருக்கிற நாம் என்றைக்காவது ஜீவகாருணிய முள்ளவரென்றும், கடவுளிடத்தில் உண்மையான பக்தியுடையவரென்றும் சொல்லத் தகுதி யுடையவர்களாவோமோ?

இப்படிப்பட்ட கொடிய செய்கைகள் ஒன்றிரண்டல்ல; பலவிடங்களிலும் பலவிதமாக நடப்பதாய் நெஞ்சுருக்கமுள்ள அநேகர் பார்த்துத் தெரிவித்துப் புலம்புகிறார்கள். ஆனாலும் இது தெரிந்திருப்பது சிலருக்கு மாத்திரமேயாம். இப்படி வருத்தப்பட்ட பிராணிகளின் மாமிசத்தைத் தின்பதே பல நோய்களுக்குக் காரணமாயிருக்கிறதென்பதை சகல ஜனங்களும் நன்றாய்த் தெரிந்துகொள்வார்களானால், இவ்வகைக் கொடுமைகளை நிறுத்த ஏதாவது ஒரு பெரிய முயற்சி சீக்கிரமே நடக்குமென்பது நிச்சயம். இதற்காக சஞ்சிகைகள் எழுதினாலும் படிப்பதில்லை; பிரஸங்கம் செய்தாலும் வந்து ஒருவரும் கேட்பதில்லையே! இதென்ன பேதமையோ, இதென்ன துரபிமானமோ? இதென்ன துர்ப்பாக்கியமோ? தெரியவில்லையே. ஆனாலும், மாமிசம் தின்பவர்களுக்கு உணவுக்காக ஆடுமாடு முதலான எளிய ஜந்துக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்பப்படும் அநியாயங்களையும், அக்கிரமங்களையும், கண்ணால் பார்த்தவரும், காதால் கேட்டவர்களுமான பல புத்திசாலிகள் நாளடைவிலே மாமிச போஜனத்தை விலக்கிவருவது மாத்திரமேயன்றி, எவருமே மாமிச போஜனம் செய்யக்கூடாதென்று எதிர்வாதம் செய்வதாகவும், வாரம்வாரம் தெரிந்துகொண்டு வருகிறது.

வாயில்லா ஜந்துக்களுக்குத் திடீரென்று பைத்தியம் பிடிப்பதுண்டு.

'பைத்தியம் பிடிப்பது மனிதர்களுக்குமாத்திரமே; மற்றப் பிராணிகளுக்குக் கிடையாது' என்று சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இரண்டொரு வைத்திய சாஸ்திரிகள் இதைப் பரிசோதனை செய்ததில், வாயில்லா ஜந்துக்களுக்கும் சித்தப்பிரமை உண்டாகித் தம் நினைவு மாறிப்போவது உண்டென்று கண்டிருக்கிறார்கள். ஆடுமாடுகளை ஏகாந்தமான நாட்டுப்புறங்களிலிருந்து பிரஜைகள் அடர்ந்த பட்டணத்து வீதிகளில் ஓட்டிக்கொண்டு போனால், அப்பொழுது அவைகளுக்கு அநேகமாய் அச்சத்தினால் அறிவுகெட்டுச் சித்தப்பிரமை உண்டாகிவிடுகிறது. பல குதிரைகள் போர்க்களத்தில் பைத்தியம் பிடித்துப் பொல்லாங்குசெய்யப் பார்த்திருக்கிறோம். சண்டை நடக்கும்பொழுது அரபிக் குதிரையொன்று திடீரென்று வெறிகொண்டு தன் நாயகன்மேல் திரும்பி அவனைக் கீழே தள்ளி அவன்மேல் படுத்துப் பலவிதமாகத் துன்பப்படுத்தியது. நன்றாய்ப் பழகிய ஒரு குதிரை கோடைகாலத்தில் ஒருநாள் சித்தப்பிரமைகொண்டு, தனக்கு எதிர்ப்பட்ட எதையும் வாயினால் கவ்வி, நாய் எலியைப் பிடித்து ஹிம்ஸிப்பதுபோல் ஹிம்ஸித்தது. இவைமாத்திரமேயல்ல; மனிதர்களுக்குப் பைத்தியம் பிடிப்பதுபோலவே, நாய், பூனை, குரங்குமுதலான ஜீவன்களுக்கும் பைத்தியம் பிடித்துப் பலவிதமான தீமைகள் செய்யும்படியாவது உண்டென்று தேக தத்துவ சாஸ்திரி ஒருவர் கண்டறிந்து சொல்லியிருக்கிறார்.

வாயில்லா ஜந்துக்களின் தேக தத்துவங்களை நன்றாய்ப் பரிசோதனைசெய்து பார்ப்பவர்கள் மேற்சொன்ன விஷயம் யாவும் உண்மையென்று ஒப்புக்கொள்ள ஒரு தடையுமிராது. ஒருநாளும் காணாத புதிய காட்சியைக் கண்டவுடனே அவைகளுக்கு மதிமயங்கிப் பைத்தியம் உண்டாகிவிடுகிறது. நாய் பூனை முதலான ஜந்து அச்சத்தினால் மூர்க்கங்கொண்டு, மனிதர் துன்புறுத்துவதனால் பைத்தியம் பிடித்து, பிறகு ஒருநாளும் அது தெளியாமலே இருந்துவிடுவதுண்டு. ஆடுமாடுகளுக்கு ஓரிடத்திற்கு ஓரிடம் அனுப்புவதனால் உண்டாகும் ஹிம்ஸைகளும், அக்காலத்தில் அவை மனத்தில்கொள்ளும் திகிலுமே அவைகளை அப்படிப் பைத்தியமாக்கப் போதுமானவை.

திடீரென்று வெறிகொண்ட நாய்.

அமெரிக்காவிலே போஸ்ட்டன் நகரத்தில் ஒரு நாய்க்குத் திடீரென்று பைத்தியம் பிடித்துப்போனதாகத் தெரிவித்தார்கள். அதுகேட்டு உடனே ஒரு அதிகாரியை அனுப்பி அந்த நாயைச் சுட்டுவிடும்படி அங்குள்ள ஜீவ ஹிம்ஸை நிவாரண சங்கத்தாருக்கு அறிக்கை செய்யப்பட்டது. அப்படியே அதிகாரி ஒருவர் அதை வந்து பார்த்தார். அந்தநாய் ஒருசிறிய இருட்டறையில்விட்டு அடைக்கப்பட்டிருந்தது. அங்கே அந்த நாயைப் பார்க்கப் பலர் வந்து பெருங்கூட்டம் கூடியிருந்தார்கள். அவர்களில் ஒருவராயினும் விளக்கெடுத்துக்கொண்டு உள்ளே போய் நாயைப் பார்க்கத் துணியவில்லை. அதிகாரி வந்தவுடனே அவர் ஒருவராகவே கதவைத் திறந்துகொண்டு உள்ளே போய், சாந்தமான இனிய வார்த்தைகளால் அந்த வெறிகொண்ட நாயைச் சமாதானப்படுத்தி, கடைசியில் அதன் பக்கத்திலே போய் அதைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியேவந்து வண்டியிலேறிக்கொண்டு ஜீவஜந்து போஷணசாலைக்குக் கொண்டுபோனார். அங்கே ஒரு அறையில் அந்த நாயை விட்டு, முதலில் அதற்குத் தண்ணீர் கொண்டுவந்து வைக்கத் திட்டம் செய்தார். தாகத்தினாலேயே அதற்கு அப்படிப்பட்ட சித்தப்பிரமை உண்டாகிவிட்டதாகத் தெரியவந்தது. அந்தக் கோடைநாளில் பல தினங்களாய்க் குடிக்கத் தண்ணீர் எங்கும் கிடைக்காமல் அல்லாடி அது துன்பப்பட்டுக்கொண்டிருந்தது போலும்.

அது நல்ல வெயில் காலம். அந்தப் பட்டணத்தில் வெளியே திரியும் பிராணிகளுக்கு வேண்டும்போது குடிக்கத் தண்ணீர் அகப்படுவது அருமை. வண்டிகளில் தண்ணீர் அடித்துக்கொண்டுவந்து அங்கங்கே தொட்டிகளில் கொட்டி நிரப்பும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், அது சரியாக நடந்தேறவில்லை. அதனாலேதான் இப்படிப்பட்ட துன்பம் நேரிட்டது.

நமது நாய் நன்றாய்த் தண்ணீர் குடித்தான பிறகு, அதற்கு உணவு கொண்டுவந்து வைக்கப்பட்டது. அதன் பசி இவ்வளவென்று சொல்லமுடியாது. வேண்டிய உணவு தின்று பசியும் தாகமும் அடங்கினவுடனே, அது அயர்ந்து படுத்துத் தூங்கிப்போய்விட்டது. மறுநாள் அவ்விடம் போய்ப் பார்த்தபோது அந்த நாய் மற்ற நாய்களைப்போலவே அந்தச் சாலையில் சந்தோஷமாய் ஓடி விளையாடிக்கொண்டிருந்தது. அப்படிப்பட்ட கொடிய ஆபத்தினின்றும் தன்னை விடுவித்த பிரபு பக்கத்தில் வரும்போது அது அவனிடத்தில் அதிகமான நன்றி பாராட்டி மிகுந்த சந்தோஷத்தை வெளியிட்டது என்று ஒரு பத்திராதிபர் சொல்லுகிறார்.

ஐயோ! இந்தப் பிரபு வந்து பார்த்து இந்த நாயை இப்படிக் காப்பாற்றாமல் முதலில் அறிக்கை செய்தபடியே கொலையாளி ஒருவன் வந்து இந்தத் துன்புற்ற நாயைப் பைத்தியம் பிடித்த நாயென்று கொலைசெய்துவிட்டிருந்தால், வீணான பாபம் வந்து சுற்றிக்கொள்ளுமல்லவா? இப்படியே காரணம் தெரியாமல் பல ஜீவன்களை வீணாக வதைசெய்து பலர் கொடிய நரகத்துக்கு ஆளாகிவிடுகிறார்கள்.

ஆகையால், நாம் சற்று நிதானித்துப் பார்ப்போமானால், இப்படியே அநேகவிதமான பைத்தியங்களைத் தெளிவிக்க நமக்கு வழியகப்படாமல் போகாது.

அன்னியதேச ஸ்திரீகள் நடத்தும் ஜீவகாருண்ய சங்கம்.

ஆஸ்திரேலியாவிலே நியூ ஸௌத் வேல்ஸில் ஸ்திரீகள் ஸ்தாபித்த ஜீவஹிம்சை நிவாரண சங்கத்தார் ஜீவகாருணியப் பத்திரிகை ஒன்று பிரசுரம் செய்துவருகிறார்கள். அந்தப் பத்திரிகையைத் தலைவராயிருந்து நடத்துபவர் அந்தச் சங்கத்தின் காரியதரிசியாகிய பிரான்ஸிஸ் லெவி என்னும் பெருமாட்டியாம். ஆஸ்திரேலியாவிலே முதல் முதல் பிரசுரமான ஜீவகாருணியப் பத்திரிகை இதுதான். இது யாவருக்கும் இனிப்பை விளைவிக்கத் தக்க சிறந்த பத்திரிகையாம். மேலும், இது ஜீவகாருணிய சங்கத்தா ரெல்லோரும் முக்கியமாகக் கவனிக்கத்தக்க பெருமையுடையது. லெவி பெருமாட்டி காரியதரிசியாயிருந்து நடத்திவருகிற இந்த ஜீவகாருணிய சங்கத்தின் சரித்திரத்தைப் பார்த்தால், கல்விப்பயிற்சி விஷயமாய் விசேஷமான அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. லெவி பெருமாட்டி 1885-ம் வருஷத்தில் 15 பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளை ஒரு சபை சேர்த்து இந்தப் பெரிய காரியத்தை ஆரம்பித்தாள். அதுமுதல் அவள் விடாமுயற்சியால் பள்ளிக்கூடங்களில் பாடுபட்டதினால், அந்தச் சங்கத்திற்கு 400 பிரதானத் தலைவர்களும், 50,000 சாதாரணத் தலைவர்களுமாய்ப் பிள்ளைகள் சேர்ந்து போனார்கள். இந்தக் கூட்டம்பெரியோர்களுடைய விசாரணையிலிருந்து அவர்களால் நடத்தப்பட்டால், இன்னும் அதிகமாகக் கொண்டாடத் தக்கதாயிருக்கும். ஆனாலும், சிறுவர்களுடைய இளமையான மனத்திலேதானே ஈவிரக்கம், ஜீவகாருணியம் முதலான நல்ல குணங்கள் உற்பத்தியாகி வளரச் செய்யவேண்டும். இந்த லோகோபகாரமான நல்ல காரியத்தையே நம்முடைய லெவி பெருமாட்டி செய்துவருகிறாள். அவள் செய்யும் காரியங்களில் மிகவும் கொண்டாடத்தக்கது அவள் பிரசுரம் செய்துவரும் பத்திரிகையேயாம்.

நாநாவிஷயங்கள்.

1. **பெற்றோர்களுடைய குற்றம்.** — இக்காலத்தில் பெற்றோர்களிடத்திலும் உபாத்தியாயரிடத்திலுமுள்ள முக்கியமான குற்றமாவது, வாயில்லா ஜந்துக்கள் விஷயத்தில் சிறுவர்கள் செய்யும் கொடுமைகளைக் கண்டியாமல் உபேக்ஷையாக விட்டுவிடுவதேயாம்.

2. **ஜீவகாருணியம் செய்யும் நன்மை.**—படிப்பு மாத்திரம் தனியே மனிதர்களை நல்லவராக்கமாட்டாது; ஜீவகாருணியமோ அப்படியல்ல; அது ஒன்றே மனிதர்களை நல்லவர்களாக்கும். படிப்பானது மனிதருக்குத் திறமையை உண்டாக்குகிறது; அந்தத் திறமை கெட்ட வழியில் புகாமல் ஜீவகாருணியம் அதை நல்வழிப்படுத்துகிறது. ஆகையால் பிள்ளைகளுக்கு மற்றப் படிப்புடனே ஜீவகாருணியத்தையும் முக்கியமாகக் கற்பிக்கவேண்டும்.

வாயில்லா ஜந்துக்களிடத்தில் கொடியனாயிருக்கிற மனிதன் கொடுந்தன்மையாகிய துர்க்குணத்தைத் தன் மனத்தில் குடிகொள்ளச்செய்து, கடைசியில் தான் அதற்கு அடிமைப்பட்டவனாகிறான்.

3. **கடவுள் கருத்தை நிறைவேற்றுபவர் யார்.**—வாயில்லா ஜந்துக்களுக்காகப் பரிந்துபேசி அவைகளுக்கு நாம் செய்யவேண்டிய கடமையைக் கிரமமாகச் செலுத்தப் பாடுபடுகிறவர்களே கடவுளுடைய கருத்தை நிறைவேற்றுகிறவராவார்கள்.

4. **பறவைகளைக் கொன்றதால் வந்த கேடு.**—கடலோரமான யகேடன் என்னும் நாட்டில் பறவைகளை மிகுதியாகக் கொலைசெய்ததனால், அத்தேசத்து ஜனங்கள் மிகுதியாக மடிந்துபோகத் தலைப்பட்டார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், அங்கே செத்துப்போகும் பிராணிகளுடைய உடல் அழுகி நாற்றமெடுக்காதபடி அவ்விடங்களை அப்பறவைகள் உடனுக்குடனே சுத்திசெய்து கொண்டிருந்தன. அந்தப் பக்ஷிகள் போய்விடவே, எவ்விடத்திலும் பிணநாற்றமெடுத்துப் பிரஜைகள் மரணமடையலானார்கள்.

5. **பயிர்த்தொழிலாளிக்கு ஒரு நற்புத்தி.**—எவ்வளவு பக்ஷி கொல்லப்படுகிறதோ, எவ்வளவு பக்ஷி முட்டை அழிக்கப்படுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு தங்கள் பயிரையழிக்கும் பூச்சிகள் விருத்தியாகுமென்று ஒவ்வொரு குடியானவனும் நன்றாகத் தெரிந்துகொள்ளக்கடவன். பக்ஷிகளை அழிக்கவொட்டாமல் காப்பாற்றுவது தங்களுக்கு முற்றும் நன்மையான காரியமென்பதை நன்றாய் அறிந்துகொண்டு, நாம் செய்துவரும் நன்முயற்சிக்குப் பயிர்த்தொழிலாளிகள் தாமும் துணையாயிருந்து பாடுபடக்கடவர். பறவைக் கொலையால் விளையும் தீங்கு மிகவும் அதிகமாயிருப்பதால், வெகு சீக்கிரமே அதற்குத் தக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1906.